அனைத்துத் தரப்பு மக்களும் அரசு மருத்துவச் சேவையைப் பெறுவதற்கு ஏதுவாக

# நெல்லையில் அதிநவீன வசதிகளுடன் 'கட்டணப் படுக்கை அறைகள்!

## முதல்வர் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ள திட்டத்தைத் தொடங்கி வைத்து — மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேச்சு!

**நெல்லை. நவ.18 - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நேற்று அனைத்து தரப்பு மக்களும் அரசு மருத்துவச் சேவையைப் பெறுவதற்கு ஏதுவாக, நெல்லையில் "கட்டண படுக்கை அறைகளை" பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார் என்று நெல்லையில் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.**

அவர் ஆற்றிய உரையின் விவரம் பின்வருமாறு:-

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்றைக்கு பல்வேறு புதிய முயற்சிகள் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 படுக்கைகள் கொண்ட 18 மெத்தை படுக்கை தொகுதிகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கட்டண படுக்கை அறை என்பது ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மட்டுமே இருந்த ஒன்று. இன்றைக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவச் சேவை அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சேவை பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் பயன்படுத்தி கொள்ள தொடங்கி இருக்கின்ற காரணத்தினால் தமிழ்நாடு முழுவதிலும் இருக்கும் அனைத்து மருத்துவமனைகளிலும் கட்டண படுக்கை அறைகளை திறந்து வைக்கிற நிகழ்வு என்பது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஏதோ அரசு மருத்துவமனைகளுக்கு லாபம் தரும் நோக்கில் செயல்படுத்தப்படுகிற திட்டம் இல்லை.

நானும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், மேயர் போன்றவர்கள் அதை திறந்து வைத்தபோது, கல்லூரியின் முதல்வர் இடத்தில் கேட்டோம்... அறைக்கான கட்டணம் எவ்வளவு? என்று. அவர் ஒரு தொகையைச் சொன்னார். உடனடியாக அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் சொன்னது, 'திருநெல்வேலி ஏழை எளியவர்கள் அதிகம் இருக்கிற பகுதி. இங்கு அதிக கட்டணம் கொடுத்து இந்த அறைகளில் தங்கி சிகிச்சை பெறுவதைக்காட்டிலும், குறைந்த அளவிலான கட்டணத்தைக் கட்டி சிகிச்சை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று சொன்னார்கள்.

அந்த வகையில் நானும், நம்முடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அவர்களும் இன்றைக்கு, ஒருவர் மட்டுமே தங்கி சிகிச்சை பெறும் அறைக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று குறைந்த அளவில் கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறோம். இந்த அறையைப் பொருத்தவரை, ஒரு தீவிர சிகிச்சைப் பிரிவுக்குள்ளான அறையாக அந்த அறை இருக்கிறது.

தனியாக ஒரு கட்டில் படுக்கை, ஒரு சோபா, கபோர்டு, அந்த அறைக்குள்ளேயே ஒரு குளியலறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு, சுடுநீர் வருவதற்குரிய ஹீட்டர் வசதிகள், தொலைக்காட்சி பெட்டி இப்படி பல்வேறு வசதிகள் அந்த அறையில், ஆயிரம் ரூபாய் கட்டணத்தில் இவ்வளவு பெரிய வசதிகள் நிச்சயமாக தமிழ்நாட்டில் வேறு எந்த இடத்திலும் இருப்பது என்பது கடினம்.

தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்றால், இதே அளவுக்கான வசதி கொண்ட ஒரு அறை நிச்சயம் 7,000 ரூபாய், 8,000 ரூபாய் இல்லாமல் சாத்தியமே இல்லை. அந்த வகையில் இன்றைக்கு அந்த அறை ஆயிரம் ரூபாய் என்கின்ற வகையில் அதற்கு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பராமரிப்பு பணிகள் செய்வதற்குத்தான். லாப நோக்கத்திற்காக அல்ல. குளிர்சாதன வசதி என்று வருகிறபோது அதற்கான மின் கட்டணம், தொலைக்காட்சிப் பெட்டி, கழிவறை என்று அனைத்து வசதிகளையும் தொடர் பராமரிப்பு மேற்கொள்வது அவசியமான ஒன்று. அந்த வகையில் ஆயிரம் ரூபாய் இதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு பேர் தங்கக்கூடிய அறைக்கு 1,500 ரூபாயும் நான்கு பேர் தங்கக்கூடிய அறைக்கு 2,000 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு 23 படுக்கைகள் கொண்ட 18 அறைகள் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இதை பொருத்தவரையில், ஏற்கனவே தமிழ்நாட்டில் நான் சொன்னதைப்போல, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மட்டுமே இருந்தது. தற்போது பதிவேற்றமாக 'கட்டண படுக்கை' அமைப்பு (Payward) இங்கே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. சேலம், மதுரை, கோவை, பொள்ளாச்சி, கும்பகோணம், ஈரோடு, கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை, தேசிய முதியோர் நல மருத்துவமனை சென்னை, திருவண்ணாமலை, இன்றைக்கு திருநெல்வேலி என்று 10 மருத்துவமனைகளில் இது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இது மட்டுமல்லாது... கன்னியாகுமரி, தஞ்சாவூர், தர்மபுரி, விழுப்புரம், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், பெரம்பலூர், தென்காசி, கோவில்பட்டி என்று இன்னும் பத்து இடங்களில் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் தமிழ்நாட்டில் 21 இடங்களில் இந்த 'Payward' என்கின்ற திட்டம் தமிழ்நாடு முழுவதும் பரவி தொடங்கி வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதன் மூலம் எனக்கு முன்னால் பேசுகிறவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, ஏழை எளியவர்களும் இந்த மருத்துவச் சேவையை பயன்படுத்திக் கொள்கிறார்கள். தற்போது நடுத்தரப் பொருளாதார வர்க்கத்தினரும் இந்த அரசின் மருத்துவச் சேவையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு அரசு மருத்துவச் சேவை என்பது பல மடங்கு உயர்ந்து கொண்டிருக்கிறது.

நேற்றைக்குகூட, நான் பத்திரிகையாளர் சந்திப்பில் சொன்னேன். சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் 2021 மே மாதத்திற்கு முன்னால் தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்னால், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தினந்தோறுமான புற நோயாளிகளின் எண்ணிக்கை 6 ஆயிரம் பேர், இன்றைக்கு அது 12,500இல் இருந்து 15, ஆயிரம் வரை உயர்ந்திருக்கிறது.

கோவையில் இருக்கும் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால், தினந்தோறுமான புற நோயாளிகளின் எண்ணிக்கை 3 ஆயிரம் பேர், இன்றைக்கு அது 4,500 - 5,000ஆக உயர்ந்திருக்கிறது. அதே போல, இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2021க்கு முன்னால் 1,500 பேர் அதிகபட்சமாக OPஐ பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அது 2,500 கடந்து சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு மருத்துவமனையிலும் மதுரை ராஜாஜி மருத்துவமனையாக இருந்தாலும், திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவமனையாக இருந்தாலும், அனைத்து மாவட்டங்களிலும் இருக்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இந்த மருத்துவ சேவை என்பது பெரிய அளவில் உயர்ந்திருக்கிறது.



அப்படியானால் இங்கே வந்திருக்கிற ஒரு சில பத்திரிகையாளர்களுக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கும். அப்படியானால் தமிழ்நாட்டில் நோயின் தன்மை பெருகி இருக்கிறதா? நோயாளிகளின் எண்ணிக்கை கூடி இருக்கிறதா? அதனால்தான் அரசு மருத்துவமனைகளுக்கு வருகிறார்களா? என்று கேட்கக் கூடும். இல்லை. எப்போதுமே இப்போது குறைவாகவே இருக்கிறது.

டெங்கு பாதிப்பு 2012-இல்தான் தமிழ்நாட்டில் அதிகபட்ச இறப்புகள். 66 பேர் அந்த ஓராண்டில் இறந்திருக்கிறார்கள். 2017-இல் 65 பேர் இறந்திருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் மிக மிகக் குறைவான அளவில் டெங்கு பாதிப்பிற்கான இறப்புகள் இந்த ஆண்டு எட்டு என்ற அளவிலே அந்த பாதிப்பு இருந்திருக்கிறது. மிகப்பெரிய அளவில் கட்டுக்குள் இருக்கிறது.

எனவே, இந்த மாதிரியான அனைத்து நோய்களின் பாதிப்பும் குறைந்த அளவிலேயே இருக்கிறது என்று சொன்னாலும், நோயாளிகள் எண்ணிக்கை அரசு மருத்துவமனைகளுக்கு அதிகமாக வருவதற்கான காரணம் என்பது, அரசு மருத்துவமனையின் மேல் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. தனியார் மோகத்தையும் கலைந்து அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வேண்டும் என்ற அக்கறையில் நாள்தோறும் பொதுமக்களுக்கு கூடிவருகின்ற காரணத்தினால் இன்றைக்கு மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கிறது என்பதை நேற்றைக்குச் சொன்னேன்.

அந்த வகையில் இந்த திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இந்த புதிய வசதி என்பது, ஏற்கனவே மிகச் சிறப்பாக மருத்துவம் என்கின்ற வகையில் பெயர் பெற்றிருக்கிற இந்த மருத்துவக் கல்லூரி. இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட இங்கே பேசியவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, ஐ.சி.எம்.ஆர்.ஓடு இணைந்து செய்தற்கிய ஒரு விருது இப்போது இந்த மருத்துவமனைக்கு கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 36 மாநிலங்கள் இருக்கிறது. அதில் 35 மாநிலங்களில் இந்த ஆய்வக வசதி இருக்கிறது. ஆனால் இந்த 35 மாநிலங்களில் இன்றைக்கு தமிழ்நாட்டில் குறிப்பாக நெல்லையில் இருக்கும் இந்தக் கல்லூரி மருத்துவமனைக்குத்தான் அந்த விருது என்பது இரண்டு நாட்களுக்கு முன்னால் டெல்லியில் இருந்து கிடைக்கப்பட்டு, எங்களால் இந்த மருத்துவக் கல்லூரிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் ... மீட்டிங்கில் அது தரப்பட்டது.

இதைச் சொல்வதற்கு காரணம், அந்த அளவிற்கு இந்த திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மிகச் சிறப்பான மருத்துவச் சேவையை ஆற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் அந்த சேவை இன்னும் கூடுதலான வகையில் இந்த மக்களுக்கு தருகின்ற நோக்கத்தில் இந்த கட்டணப் படுக்கை இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண் மாணவியர்கள் மருத்துவக் கல்லூரி மாணவிகளாக இருந்தாலும்; அதேபோல் இந்த மருத்துவத் துறையில் பயின்று கொண்டிருக்கிற மாணவிகள் யாராக இருந்தாலும்; அதேபோல் செவிலியர்கள், மருத்துவர்கள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றும் பெண் மருத்துவர்கள், பெண் மருத்துவர்கள் மட்டுமல்ல, பெண் பணியாளர்கள் இப்படி யாராக இருந்தாலும் அவர்களுக்கு என்று ஓய்வு நேரம் வேண்டும். அவர்களுக்கென்று இயற்கை உபாதைகள் போன்ற பல்வேறு விஷயங்கள் இருக்கிறது. இவற்றிற்கு இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக 'பிங் சோன்' என்கின்ற அமைப்பைத் தொடங்கி, அதில் 5 அறைகள் கட்டுவித்து அதுவும் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி இன்றைக்கு அதற்கு பெரிய அளவில் வழிகாட்டி இருக்கிறது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்றைக்கு அந்தச் சிறப்பான நிகழ்வை நாங்கள் தொடங்கி வைத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இப்போது நாங்குனேரி தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்பட்டி என்ற ஒரு ஊரில் வட்டார பொது சுகாதார நிலைய கட்டிடம் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டது, அதுவும் இன்றைக்கு இப்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்றைக்கு இது போன்ற பல்வேறு பணிகள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடங்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் பேசுகிறபோது சொன்னார், 'நான் நான்கு, ஐந்து முறை இங்கு வந்திருப்பதாக' சொன்னார். என்னுடைய நினைவு சரியாக இருக்குமேனால் நான் எட்டு முறை வந்திருக்கிறேன் என்று கருதுகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு எட்டு முறை வந்திருக்கிறேன். இந்த எட்டு முறை வருகை தந்ததும் ஏதாவது ஒரு திட்டத்தை தொடங்கி வைப்பதற்காகத்தான்.

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலோடு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறோம். ... என்று சொல்லக்கூடிய புற்றுநோயை துல்லியமாக கண்டுபிடிக்கும் கருவி, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது. சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும். ஆனால் இன்றைக்கு ஏழு இடங்களில் வந்திருக்கிறது. 7 இடங்களில் வந்திருக்கிறது என்றால், அதில் ஒன்று திருநெல்வேலி. ஏறத்தாழ 12 கோடி ரூபாய் மதிப்பிலான ... அந்த ஸ்கேன் வசதி திருநெல்வேலியில் எங்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

காஞ்சிபுரத்தில் தொடங்கி வைத்திருக்கிறோம். சேலத்தில் தொடங்கி வைத்திருக்கிறோம். கோவையில் தொடங்கி வைத்திருக்கிறோம். இப்படி ஐந்து இடங்களில் அந்த ... ஸ்கேன் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்தது இரண்டு. இப்போது ஐந்து. மொத்தம் ஏழு என்ற வகையில் அந்த ... ஸ்கேன்கள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாது, இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டிஜிட்டல் எக்ஸ்ரே எங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பேத்தலாக் கருவி ஒன்று எங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. டிஜிட்டல் புளுரோஸ்கோபி என்ற ஒரு கருவி தொடங்கி வைக்கப்பட்டது. பெண்களின் மார்பக புற்றுநோயை கண்டறியும் மேமோகிராம் கருவி ஒன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அதிநவீன மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டுமே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய கல்லூரியின் முதல்வர் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ஒன்று வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்றைக்கு 72 கோடியே 10 லட்சம் செலவில் ஒரு மிகப்பெரிய மருத்துவ கட்டடம் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டிடத்தை பொருத்தவரை மார்ச் மாதத்தில் இறுதிப் பணிகள் முடியும் என்று வருகை தந்திருக்கும் பொதுப்பணித் துறையின் அலுவலர்கள் கூறினார்கள்.

மார்ச் மாதத்தில் இறுதியில் இந்தப் பணிகள் முடிந்துவிட்டால், உடனடியாக நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வாயிலாக இந்தக் கட்டிடம் திருநெல்வேலி மக்களின் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. இந்தக் கட்டிடத்தை பொருத்தவரையில், மிகப்பெரிய அளவில் இன்றைக்கு 450க்கும் மேற்பட்ட புதிய படுக்கை வசதிகளை கொண்ட ஒரு மருத்துவ அமைப்பு. 10 அதிநவீன ஆப்பரேஷன் தியேட்டர்கள் என்கின்ற வகையில் பல்வேறு வகைகளில் அந்தக் கட்டிடம் தொடங்கி வைக்கப்படவிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, 50 படுக்கைகள் கொண்ட ஒரு தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் 23.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு முழு உடல் பரிசோதனைப் பிரிவு ஒன்று ஐந்து கோடி ரூபாய் செலவில் கட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண் சிகிச்சைப் பிரிவில் கூடுதல் தளங்கள் அமைப்பதற்கு 2.75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பன்னோக்கு பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனவே, இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மட்டும் ஏறத்தாழ 104 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு புதிய கட்டமைப்புகள் இன்றைக்கு செய்வதற்குரிய நடவடிக்கை கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, கடந்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் இங்கே நேரடியாக வந்து இரண்டரை கோடி மதிப்பிலான பத்து நகர்ப்புற நல வாழ்வு மையங்களை திறந்து வைத்திருக்கிறோம். ஐந்து துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் ஒரு கோடியே 35 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளதை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் மூன்று கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டவைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

கூடங்குளம் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜன் பிளான்ட் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலானது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. களக்காடு அரசு மருத்துவமனையில் விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு ஒன்று நம்முடைய பெருமதிப்பிற்குரிய ரூபி.மனோகரன் போன்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள். அங்கே ஒரு காத்திருப்பு கூடம், பாம்பு கடி சிகிச்சை பிரிவு ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி துணை சுகாதார மற்றும் கார்டியோ பயிற்சிப் பள்ளி ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஏற்கனவே இவ்வளவு கட்டிடங்கள் திருநெல்வேலியில் குறிப்பாக இந்த மாநகரப்பகுதியில் திறந்து வைக்கப்பட்டி ருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, வந்தவுடன் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வஹாப் அவர்கள் இன்றைக்கு இந்த மாநகராட்சிப் பகுதியில், அவரும் கேட்டார், மேயர் அவர்களும் கேட்டார். நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் என்கின்ற வகையில் பத்து மருத்துவமனைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதை விரைந்து திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வெறும் கட்டிடமாக இருந்தால் இன்றைக்கேகூட திறந்து வைத்துவிட்டு சென்றுவிடலாம்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்கு ஒரு முறை தி.மு.கழகத்தின் தலைமைக் கழகம் அறிவாலயம் ஒன்றை அங்கு திறந்து வைக்க சென்ற போது, டெல்லியில் ஒரு மிகச் சிறப்பான மருத்துவ கட்டமைப்பு, குறிப்பாக குடிசைப் பகுதி மக்கள் மற்றும் ... போன்ற பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு காலையிலும் மாலையிலும் மருத்துவச் சேவை என்கிற வகையில் ஒரு மருத்துவ கட்டமைப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டது

. முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அந்த மருத்துவமனையை பார்த்தார்கள். ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்று நான்கு பணியிடங்களோடு ஒரு மருத்துவமனை காலை 8 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலான ஒரு மருத்துவமனை அங்கே செயல்பட்டுக் கொண்டிருந்தது.

சிறப்பான அந்தச் செயல்பாட்டை பார்த்த நம்முடைய முதலமைச்சர் சட்டமன்றத்திற்கு வந்து, 110 விதியின் கீழ் அறிவித்தார்கள். 708 மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் அமையும். அந்த 708 மருத்துவமனைகளை பொருத்தவரையில் தமிழ்நாட்டில் இருக்கும் 21 மாநகராட்சிகளிலும், 63 நகராட்சிகளிலும் அந்த மருத்துவமனைகள் வரும் என்று சொன்னார்கள்.

அந்த வகையில் இந்த திருநெல்வேலி மாவட்டத்திற்கு 22 மருத்துவமனைகளை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த 22ஐ பொருத்தவரையில், திருநெல்வேலி மாநகராட்சிக்கு 20-ம், அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு ஒன்றும், விக்ரமசிங்கபுரம் நகராட்சிக்கு ஒன்றும் என்று 22 அறிவித்தார்கள். அறிவித்த 22இல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 ஜூன் திங்கள் ஆறாம் தேதி சென்னையில் இருந்து காணொளி வாயிலாக திருநெல்வேலியில் 10 நகர்புற நலவாழ்வு நிலையங்கள், அம்பாசமுத்திரம் நகராட்சியில் ஒன்றும், விக்ரமசிங்கபுரம் நகராட்சியில் ஒன்றுமாக 12ஐ திறந்து வைத்தார்கள்.

அப்படியானால் மீதம் இருக்கும் பத்தை திறந்து வைப்பதற்குத்தான் சட்டமன்ற உறுப்பினர் வஹாப் அவர்களும், மேயர் அவர்களும் கேட்டார்கள். இப்போது மிக விரைவில் அந்த மருத்துவமனைகள் திறந்து வைக்கப்படவிருக்கிறது. ஹெச்.ஆர். என்று சொல்லக்கூடிய பணி நியமனங்கள் நியமிக்கும் பணிக்கு அரசாணை தரப்படுகிற சூழல் இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் முடிந்துவிடும். அது தரப்பட்டவுடனே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான 'டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் சொசைட்டி' என்கின்ற அமைப்பின் மூலம் இந்த மருத்துவ பணியிடங்கள் இங்கேயே நிரப்பப்படும்.

இங்கேயே பத்திரிகைகளுக்கு விளம்பரப்படுத்தி ஒரு மருத்துவமனைக்கு நான்கு பேர் என்கின்ற வகையில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் இந்த நான்கு பணியிடங்களை கொண்ட ஒரு மருத்துவமனை. இந்த நான்கு பணியிடங்கள் 10 மருத்துவமனைகளுக்கு 40 பணியிடங்களுக்கான பத்திரிகை விளம்பரத்தை கொடுத்து தகுதியானவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு தேர்ந்தெடுத்து அந்த மருத்துவமனைகளில் வைக்கவிருக்கிறார்கள்.

அந்தப் பணியாளர்கள் நியமனத்திற்கு பிறகு, மிக விரைவில் அந்த 10 மருத்துவமனைகளையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக சென்னையிலிருந்து திறந்து வைக்கவிருக்கிறார்கள் என்ற அந்த உறுதியையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் உரையாற்றினார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குப் பகுதி 92 வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டலில் கழக நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் வாக்காளர் சரிபார்க்கும் முகாமில் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் பணியாற்றினர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்குதல், பிழை திருத்தம் பணி நடைபெற்றது.இதில் பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன், மண்டலக்குழுத் தலைவரும் வட்ட செயலாளருமான நேதாஜி யு.கணேசன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் ஆய்வு செய்தனர்.உடன் எஸ். கிருஷ்ணன், கே.சி.ராஜா, எல்.சந்துருமோகன், பிஎல்ஏ2 பூபதி, தயாளன், துரை, வேலு, ஜலால், மணிகண்டன், ஏ.ஆனந்தன், எம்.பி. பாலு, எஸ்.கமுருதீன், எஸ்.பி.டி. ஷேக், எம்.விமலா, கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின்

# முன்னாள் மாநிலத் தலைவர் மா.ச.முனுசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, நவ.18- தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் மாநிலத் தலைவர் மா.ச. முனுசாமி அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் மாநிலத் தலைவர் மா.ச.முனுசாமி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன். ஆசிரியர் நலனிற்காகவும் உரிமைகளுக்காகவும் அயராது பணியாற்றிய அவரது உழைப்பும் தொண்டும் ஆசிரியர் பெருமக்களால் என்றென்றும் நினைவுகூரப்படும்.

மா.ச.முனுசாமி அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், தோழர்கள், ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

பம்மல் பேரூராட்சி முன்னாள் தலைவர்

# கழக முன்னோடி பம்மல் மா.சூரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை நவ:18*

காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக பேரியக்கத்திற்காக கழகம் அறிவிக்கும் ஆர்ப்பாட்டம், மாநாடு என அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறு வயதிலிருந்து வேகமும் விவேகத்துடன் பணியாற்றிய முன்னாள் பேரூராட்சி துணை செயலாளர், முன்னாள் பம்மல் பேரூராட்சி செயலாளர், முன்னாள் பம்மல் பேரூராட்சி தலைவர், முன்னாள் பம்மல் நகர கழக அவைத் தலைவர் என பல பதவிகளை வகித்த கழக முன்னோடி பம்மல் மா.சூரன் அவர்கள் நேற்று 17.11.2024 இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



மறைந்த கழக முன்னோடி பம்மல் மா.சூரன் அவர்களின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (திங்கள் 18.11.2024) மாலை 3.00 மணிக்கு முனுஆதி தெரு, பம்மல் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் ஆதவாபாக்கம் ஊராட்சியில் அங்கன்வாடி கட்டிடத்தினை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் திறந்து வைத்து பயன்பாட்டிற்கு அர்பணித்தனர். இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.சசிகுமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய மற்றும் பேரூர் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் எதிர்வரும் நவம்பர் 27அன்று வருவதை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் மூன்றாவது நிகழ்ச்சியாக, நம்ம எக்மோர் உதயநிதி ஸ்டாலின் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில், வார்டு எண்.77, புளியந்தோப்பு, டிமலஸ் சாலையில் உள்ள கே.பி.பார்க் செயற்கை புல்தரை கால்பந்து விளையாட்டு மைதானத்தில் 16 அணிகள் பங்கேற்ற கால்பந்தாட்டப் போட்டி நேற்று (17-11-2024) நடைபெற்றது. இப்போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த அணிகளுக்குப் பரிசுத் தொகையும், சிறப்பாக ஆடிய அணிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு கோப்பை, கேடயம், மெடல்களையும், விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் ஜெர்சி உடைகளையும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் வழங்கினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.எ. ஆலோசனைப்படி, ஆரணி பேரூர் கழகத்தின் செயலாளர் பி.முத்து தலைமையில் நடைபெற்ற வாக்காளர் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் பணியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மு.பாஸ்கரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆரணி எஸ்.ரோஸ் பொன்னையன் , பொருளாளர் ஜி. கரிகாலன், வார்டு செயலாளர் சி.நீலகண்டன், டி.ஜெயக்குமார், வழக்கறிஞர் ஜெகநாதன், பி.எல்.ஏ. உறுப்பினர்கள் ஈசா இ.ஜாவித், டைலர் பழனி, எல்.உதயகுமார், சாலேக், முரளி, எம்.சுல்தான், டி.பாஸ்கர் ஜி.சந்தோஷ், கே.பன்னீர்செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.